# முக்கிமலை ஊர் கோயமுத்தூர் வாழ் மக்கள் நல மன்றம்

## பொதுக்குழு மற்றும் நிர்வாகக் குழு இணைந்த கூட்டம்

## *26-2-2025 * முக்கிமலை*

*முக்கிமலை ஊர் கோவை வாழ் மக்கள் நல மன்றத்தின் பொதுக்குழு மற்றும் நிர்வாகக் குழு இணைந்த கூட்டம் 26-2-2025 மகா சிவராத்திரி தினத்தன்று முக்கிமலை ஊரில் நடந்தது. இந்த கூட்டத்தில் முக்கிமலை சொந்தங்கள், முக்கிமலை பெண்கள், மருமகன்கள், குழந்தைகள், பொதுமக்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டனர்.*





*கூட்டத்திற்கு ஊர் தலைவர் திரு K. சந்திர கவுடர் அவர்கள் மற்றும் சங்கத்தின் தலைவர் திரு. J. சந்திரன் ஆகியோர் தலைமை தாங்கினர். கூட்ட த்தில் நடத்திய உரையாடல்கள் மற்றும் தீர்மானங்களில் சாராம்சம் வருமாறு:*

1. *சங்கம் ஆரம்பித்த பின்பு முதல் மரண நிகழ்வாக சங்க உறுப்பினர் திரு N. மாதன் அவர்கள் மறைவு (25-2-2025) இருந்தது. அன்னாரின் மறைவிற்கு பொதுக்குழு உறுப்பினர்கள் மௌன அஞ்சலி செலுத்தினர். அவரை இழந்து வாடும் திருமதி சுபத்ரா மாதன், மகன் திரு M. ஸ்ரீபதி மற்றும் குடும்ப உறுப்பினர்கள் அத்துணை பேருக்கும் பொதுக்குழு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து இறைவன் அவர்களுக்கு இந்த இழப்பை தாங்கும் சக்தியை தர வேண்டும் என்று பிரார்த்தனை செய்தனர்.*

2. *திரு மாதன் அவர்களின் மறைவை தொடர்ந்து அவரது புதல்வர் திரு M. ஸ்ரீபதி அவர்களை சங்கத்தின் உறுப்பினராக பதிவு செய்யும் தீர்மானம் நிறைவேறியது.*

3. திரு மாதன் அவர்களின் ஈமச்சடங்கிற்கு குறுகிய கால அவகாசமே இருந்த போதும், பெருவாரியான சொந்தங்கள் நேரில் கலந்து கொண்டு இறுதி யாத்திரையை நேர்த்தியாக நடத்திக் கொடுத்தமைக்கு பொதுக்குழு பாராட்டுதல்களை தெரிவித்தது.

4. நம் சங்க விதிமுறைகள் படி பிரேதத்தை ஊருக்கு எடுத்து செல்லும் ஆம்புலன்ஸ் கட்டணம் தவிர இறுதியாத்திரை சம்பந்தப்பட்ட அனைத்து செலவுகளையும் சங்கமே ஏற்று ஊர் சொந்தங்களுக்கு ரூபாய் 25 ஆயிரத்திற்கான காசோலை முன்பணமாக வழங்கப்பட்டது. இதன் மூலம் சங்கத்தின் பிரதான திட்டமான "வரியில்லா இறுதி யாத்திரை" நடைமுறைக்கு வந்துள்ளது என்பதையும் பொதுக்குழு பதிவு செய்தது. எல்லா செலவுகள் பட்டியல் பெறப்பட்ட பின் நிலுவை தொகை அளிக்கப்பட்டு செலவுகள் விவரம் சங்க கணக்கில் பதிவு செய்யப்படும்.

5. கேஸ் மயானத்தில் முக்கிமலையிலிருந்து தகனம் செய்யப்பட்ட முதல் சொந்தம் திரு N. மாதன் அவர்கள் என்பதும் பதிவு செய்யப்பட்டது.

6. திரு மாதன் அவர்களின் இறுதியாத்திரையை தொடர்ந்து குடும்பத்தில் நடத்தக்கூடிய சடங்குகள் அனைத்தையும், 25-2-2025 அன்றே போர்க்கால அடிப்படையில் நடத்தி முடித்த அவரது குடும்ப அங்கத்தினர்களுக்கும் நமது முக்கிமலை சொந்தங்களுக்கும் மனமார்ந்த பாராட்டுகளை பொதுக்குழு பதிவு செய்தது.

7. இந்த இறுதியாத்திரை நடத்துவதில் கிடைத்த அனுபவம் எதிர்காலத்தில் இது போன்ற நிகழ்வுகள் ஏற்படும்பொழுது மிக நேர்த்தியுடன் கையாள்வதற்கு உதவியாக இருக்கும் என்பதை அங்கத்தினர்கள் பதிவு செய்தனர்.

8. சங்கத்தின் மருத்துவ உதவி திட்டத்தின் மூலமாக அறுவை சிகிச்சை செய்து கொண்ட ஊர் தலைவர் திரு K. சந்திர கவுடர், சங்க உறுப்பினர் திரு J. நகுலன் மற்றும் சங்க உறுப்பினர் திரு C. சோமசுந்தரத்தின் மகள் குமாரி S. ரித்விகா ஆகியோருக்கு தலா ரூபாய் 5,000 உதவித்தொகை வழங்கப்பட்டது.





9. *26-2-2025 காலை மகா சிவராத்திரி விழாவின் ஓர் அங்கமாக அன்னதானத்திற்கான கொடி ஏற்றப்பட்டு சிவ வழிபாடு நிகழ்ச்சிகள் தொடங்கப்பட்டன. மகாசிவராத்திரி சதுர்த்தசி நேரம் ஆரம்பித்த காலை 11.08க்கு பிறகு நமது சிவன் திருக்கோவிலில் விமரிசையாக பூஜைகள் செய்து அன்று இரவு நடத்த உள்ள மகா சிவராத்திரி வழிபாட்டிற்கு பரம்பொருள் ஆசிர்வாதம் அளிக்க வேண்டும் என்று சிவ ஸ்தலத்திலும் எத்தை அம்மன் சுத்துகல்லிலும் ஆத்மார்த்தமாக பிரார்த்தனை செய்தனர்.*











10. *நமது முக்கிமலை ஊரில் சிவன் கோவில் நிறுவிய பின்பு விமரிசையாக கொண்டாடப்படும் முதல் மகா சிவராத்திரியாக அமைய வேண்டும் என்ற பிரார்த்தனை அத்துணை சொந்தங்கள் மனதிலும் எழுந்ததை தொடர்ந்து பெருவாரியான சொந்தங்கள் இரவு 10 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை நடக்கும் மகா சிவராத்திரி நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் வைக்கப்பட்டது.*

11. *காலை பூஜைகளை தொடர்ந்து அன்னதான நிகழ்ச்சி தொடங்கி பின்பு ஆடல் பாடல் நிகழ்வுகளும் நடைபெற்றதற்கு சொந்தங்கள் பரம்பொருள் சிவபெருமானுக்கு தங்களது நன்றிகளை காணிக்கையாக்கினர்.*











## *மகாதேவருடன் மகா சிவராத்திரி*



- மகா சிவராத்திரி இரவு (26-2-2025) நமது ஊர் சிவன் கோயிலில் வழிபாடு நடத்தியது நம்முள் ஆன்மீக அதிர்வலைகளை ஏற்படுத்தி இருக்கிறது என்பதே நிதர்சனம். 50க்கும் மேற்பட்ட இளையவர்கள் முதல் பெரியவர்கள் வரை பஜனை, நாம சரணம், சத்சங்கம் ஆகியவற்றில் கலந்து கொண்டது மனதில் உறுதியையும் சிவபக்தியையும் அதிகரித்திருக்கிறது என்றால் மிகை ஆகாது. மகா சிவராத்திரி விழாவை மிகவும் சிறப்பாக நடத்த ஆசீர்வாதம் அளித்த மகாதேவருக்கு "நமசிவாய" நாமங்கள் கோடி சமர்ப்பணம்!

- அங்கத்தினர்களின் பிரார்த்தனைக்கு ஏற்ப முக்கிமலையில் சிவன் கோவில் கட்டியதற்கு பின்பு மிகவும் விமரிசையாக, அதிக அளவில் சொந்தங்கள் கலந்து



கொண்ட,, மகா சிவராத்திரி விழாவாக 26-2-2025 இரவு தொடங்கி 27-2-2025 காலை முடிந்த விழா இருந்திருக்கும் என்று அங்கத்தினர்கள் பதிவு செய்து விழாவில் எந்த ஒரு அசம்பாவிதமும் நிகழா வண்ணம் நேர்த்தியாக நமது கைகளைப் பிடித்து மகாசிவராத்திரி விழாவை விமரிசையாக நடத்திக் கொடுத்த பரம்பொருளுக்கு கோடி நமஸ்காரங்களை காணிக்கையாக்கி வரும் காலங்களிலும் இதே போன்று மகாசிவராத்திரி விழா நடைபெற பரம்பொருள் ஆசீர்வதிக்க வேண்டும் என்று அங்கத்தினர்கள் தங்கள் பிரார்த்தனையை செலுத்தினர்.

- மகா சிவராத்திரி விழாவிற்கு மனமுவந்து நன்கொடை அளித்த அத்துணை சொந்தங்களுக்கும் மனமார்ந்த நன்றியை சங்கம் தெரிவிக்கின்றது. பூஜை மற்றும் அன்னதான நிகழ்வுகளுக்காக நமது ஊர் சொந்தங்களுக்கு ரூபாய் 55,000 முன்பணம் வழங்கப்பட்டுள்ளது. அனைத்து செலவினங்கள் விவரங்கள் பெற்ற பின் வரவு செலவு பட்டியல் தயார் செய்யப்பட்டு அங்கத்தினர்களுடன் பகிரப்படும்.

- அடுத்தடுத்த இரண்டு நாட்களில் நடந்த நிகழ்வுகளான இறுதி யாத்திரை மற்றும் மகா சிவராத்திரி விழா அங்கத்தினர்களில் தயார் நிலையை உறுதிப்படுத்துவதற்காக பரம்பொருளே ஏற்படுத்திய நிகழ்வுகள் என்பதை உணர்ந்து இனி எந்த விதமான நிகழ்வுகள் எந்த தருணத்தில்

*நிகழ்ந்தாலும் மன உறுதியுடனும் சரியான திட்டமிடலுடனும் நடத்துவது சாத்தியம் என்பதை அங்கத்தினர்கள் பதிவு செய்தனர்.*

***வளர்க சங்கம்!!***

***ஓம் நமசிவாய!!!***